**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 26.02.2026

அசல் வழக்கு எண். 300/2024

வா.சா. 1 – ஆனந்த லட்சுமி, க/பெ. துரைராஜ்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

கடந்த 03.09.2021 அன்று முதல் பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் இருந்து வருகிறார்கள் அப்பொழுது நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் முதல் மாடியில் வசித்து வந்தோம். நீங்கள் வாடகை வாங்குகிறீர்கள் யாரிடமிருந்து வாடகை வாங்குகிறீர்கள் என்றால் தன்வா குழுமத்திடமிருந்து வாடகை வாங்குகிறோம் அது ஒரு நிறுவனம் ஆகும். அவர்கள் என்ன மாதிரியான தொழில் செய்கிறார்கள் என்றால் வியாபாரம் தொழில் செய்து வருகிறார்கள். அவர்கள் ரியல் எஸ்டேட் செய்கிறார்கள் அது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் ரியல் எஸ்டேட் செய்வது எனக்கு தெரியாது. தன்வா குழுமத்திடமிருந்து மட்டுமே வாடகை வாங்குகிறீர்கள் என்றால் சரிதான் மற்றவர்களிடம் வாடகை வாங்குவதில்லை என்றாள் சரிதான். வாடகை ஒப்பந்தத்தில் தேதி தவறாக உள்ளது என்றால் தெரியாது. உங்களிடம் போட்ட அக்ரீமெண்ட் தேதி தவறாக இருக்கிறது என்றால் சரியில்லை. 03.09.2021க்கு பதிலாக 03.10.2021 என்று தேதி தவறாக இருக்கிறது என்றால் சரி இல்லை. மூன்றாவது பிரதிவாதியும் இரண்டாவது பிரதிவாதியும் சகோதரிகள் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீட்டில் இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளுடன் அவர் தாயார் வசித்து வந்தார் என்றால் சரிதான் அது மட்டுமல்லாமல் அந்தப் பெண்ணின் காதலனும் அந்த வீட்டில் வசித்து வந்தார். இது பற்றி கேட்க போய் தான் பிரச்சனையே துவங்கியது.

இரண்டாவது பிரதிவாதி வெளிநாட்டில் பணிபுரிகிறார் தெரியுமா என்றால் தெரியாது. முதல் பிரதிவாதி வாடகை கொடுக்கவில்லை என்கிற காரணத்திற்காக நீங்கள் வேண்டுமென்று இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. நான் முதல் பிரதிவாதி மீது மட்டுமே வாடகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதலாவது பிரதிவாதியும் இரண்டாவது பிரதிவாதியும் போட்ட வாடகை ஒப்பந்தப்படி லீஸ் தொகை ரூபாய் 6 லட்சம் காலி செய்யும் பொழுது வட்டி இல்லாமல் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று மாத வாடகையை கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram